**இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்**
**மிகிந்தலை**

பதிவு எண்:- ..................................................

RJT/SS/04/01/N1/20..........

செல்வி/ செல்வன்……………………..

அன்பின் மாணவ/ மாணவிகளுக்கு,

................**2022**..................... கல்வியாண்டு

.............விவசாய................................ பீட மாணவ, மாணவிகளுக்கான பல்கலைக்கழக விடுதி வசதிகள் வழங்கல்.

1. மேற்படி............**2022**...........கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக விடுதிகள் பெற்றுக்கொள்வது தொடர்பிலான உங்களுடைய விண்ணப்பத்தின் மூலம்....**28.08.2023**.......திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் **விவசாய பீட விடுதி, புளியங்குளம் வளாகம்** .உங்களுக்கு விடுதி வசதி வழங்குவதற்கு பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

   இதனடிப்படையில் மேற்குறிப்பிட்ட தினத்தில் மு.ப 9.00 – பி.ப 3.00 வரையான காலப்பகுதியில் அவ்விடுதிக்கான உபவிடுதிக் காப்பாளரின் மூலம் உங்களுக்கு விடுதி வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்துக் கொள்கின்றோம்.

2. பல்கலைக்கழக விடுதியில் உங்களுக்கு தரப்படும் அறையில் குறித்த கல்வி ஆண்டில் தங்கியிருத்தல் வேண்டும். ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின்றி தரப்பட்ட விடுதியிலிருந்து வேறு ஒரு பல்கலைக்கழக விடுதிக்கோ அல்லது அறைக்கோ மாறுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. அறைகளில் வழங்கப்பட்டுள்ள பொருட்களை வேறு இடங்களுக்கு கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

3. பல்கலைக்கழக விடுதி அனுமதி பெற்ற ஒரு மாணவன்/ மாணவி தனது சுய விருப்பத்தோடு விடுதியிலிருந்து விலகிச் செல்லும் குறித்த கல்வியாண்டில் எச்சந்தர்ப்பத்திலும் அம் மாணவன்/ மாணவிக்கு அதே பல்கலைக்கழக விடுதி அல்லது பல்கலைக்கழகத்தின் வேறு விடுதிகளிலோ தங்குவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

4. புதிய மாணவர்களின் அனுமதியின் போது பல்கலைக்கழக விடுதி வசதி பெறும் மாணவ மாணவிகள் அனைவரும் முதலாம் கல்வியாண்டுக்கான கீழ்வரும் கொடுப்பனவுகளுக்காக(i,ii) இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் அனுராதபுர மக்கள் வங்கிக் கிளையின் கணக்கிலக்கம்

008-1-001-8-1725841 வரவிடப்படும் வகையில் இலங்கையில் எப்பகுதியிலுமுள்ள மக்கள் வங்கி கிளை ஒன்றில் ரூ 900 ஐ வைப்பிலிட வேண்டும்.

i. பல்கலைக்கழக விடுதி நுழைவுக்கட்டணம் - ரூ.100.00
ii. பல்கலைக்கழக விடுதி கட்டணம் - ரூ.800.00 (முதலாம் கல்வியாண்டு)
iii. முதலாம் கல்வியாண்டு தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு கல்வியாண்டுகளின் தொடக்கத்திலும் விடுதிக்கட்டணமாக ரூ.850.00 செலுத்தப்பட வேண்டும்.(ஒவ்வொரு கல்வியாண்டிலும் பல்கலைக்கழக விடுதிக்கட்டணமாக முதல் 6 மாதங்களுக்கு ரூ.400.00 உம் விடுதி பதிவு புதுப்பித்தல் கட்டணமாக ரூ.50.00 உம் அறவிடப்படுவதுடன், அடுத்த 6 மாதங்களுக்கான விடுதிக்கட்டணமாக ரூ.400.00 அறவிடப்படும்.) கட்டணங்கள் செலுத்தப்பட்டதற்கான உறுதிச் சீட்டு குறித்த விடுதியின் உபவிடுதி காப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு குறித்த காலப்பகுதியில் செலுத்த தவறும்பட்சத்தில் விடுதிக்கட்டணத்தின் 50% தண்டப்பணமாக அறவிடப்படும்.

iv. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கவனமாக வைத்திருப்பதோடு, தேவைப்படுமிடத்து சமர்ப்பிக்க கூடியதாய் இருக்க வேண்டும். பற்றுச்சீட்டு தவறப்படுமிடத்து வேறு பற்றுச்சீட்டு வழங்கப்படமாட்டாது.

v. விடுமுறை வழங்கப்பட்ட காலப்பகுதியில் விடுதியில் தங்குவதாயின் விடுதி காப்பாளர் அல்லது உபவிடுதிக்காப்பாளரின் அனுமதியுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் தங்கியிருக்கலாம். அவ்வாறு தங்குமிடத்து ரூ.400.00 விடுதிக்கட்டணமாக அறவிடப்படும். மேலதிக மின் உபகரண பாவனைக்காக உபவிடுதிக்காப்பாளரின் அனுமதி பெறப்பட வேண்டும்.

பல்கலைக்கழக shroff இல் கட்டணங்களை செலுத்துவதன் மூலம் பெறப்படும் பற்றுச்சீட்டை விடுதிக்காப்பாளரிடம் ஒப்படைக்கும் வரை விடுதியில் தங்குவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5. பல்கலைக்கழக விடுதியிலுள்ள பொதுவான வானொலி, தொலைக்காட்சி மற்றும் ஏனைய இசைக்கருவிகள் பி.ப 9.30-மு.ப 6.00 வரை பாவிப்பதற்கு அனுமதி இல்லை.

6. விடுதியின் ஒழுக்கவிழுமியங்களுக்கு பொறுப்பாக விடுதிக்காப்பாளர் அல்லது உபவிடுதிக்காப்பாளர் இல்லாதவிடத்து கல்விசார் உபவிடுதிக்காப்பாளர் செயற்படுவார். ஆகவே இந்நபர்களால் வழங்கப்படும் ஒழுக்க நியமங்களுக்கு மாணவ மாணவிகள் அனைவரும் கட்டுப்பட வேண்டும்.

7. தாமதமாக விடுதிக்கு வருகை தருவது தொடர்பில் விடுதிக்காப்பாளர் அல்லது உபவிடுதிக்காப்பாளரின் அனுமதியின்றி எந்தவொரு மாணவனுக்கும் மு.ப 5.00 க்கு

முன்னதாகவோ பி.ப 10.00 க்கு பின்னரோ உட்பிரவேசிக்க/ வெளியேற முடியாது. மாணவிகளுக்கு மு.ப 5.00 க்கு முன்னதாகவோ பி.ப 7.30 க்கு பின்னரோ உட்பிரவேசிக்க/ வெளியேற முடியாது.

8. விடுதிக்காப்பாளர், உபவிடுதிக்காப்பாளர் அல்லது பல்கலைக்கழக அதிகாரி ஒருவரின் அனுமதியின்றி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் வெளியிடங்களில் தங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. விடுதியிலிருந்து வெளியிடத்தில் தங்கியிருக்க வேண்டிய சந்தர்பம் ஏற்படின் கீழுள்ள விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

   i. வார இறுதி விடுமுறைகளுக்கு விடுதிக்காப்பாளர்/ உபவிடுதிக்காப்பாளரிடம்,
   ii. கல்விசார் நடவடிக்கைகளுக்காக வெளியிடங்களில் 7 நாட்கள் வரையான காலம் தங்க வேண்டியேற்படின் விடுதிக்காப்பாளர் ஊடாக குறித்த பீடாதிபதியிடம்,
   iii. 7 நாட்களுக்கு மேற்பட்டதாயிருப்பின் விடுதிக்காப்பாளர்/ உபவிடுதிக்காப்பாளர் மற்றும் பீடாதிபதி ஊடாக துணைவேந்தரிடம்,

   குறித்த விடுமுறைக்கான அனுமதி பெற வேண்டும்.

9. தனது சுய விருப்பின் பெயரில் விடுதிகளுக்கிடையில் மாறுதல் மற்றும் தனக்கு ஒதுக்கப்பட்ட விடுதி அறையினை வேறு ஒருவருக்கு கொடுத்தல் என்பவை அனுமதிக்கப்படமாட்டாது.

10. விடுதியிலிருந்து வெளியேற யாதுமொரு மாணவன்/ மாணவி விரும்பின், இது தொடர்பில் விடுதியிலிருந்தி வெளியேற ஒருவார காலத்திற்கு முன்னதாகவே விடுதிக்காப்பாளர் / உபவிடுதிக்காப்பாளர் ஊடாக, உதவிப்பதிவாளர் (மாணவர்களுக்கான நலன்புரி சேவை)க்கு எழுத்து மூலமாக அறியத்தர வேண்டும்.

11. எந்த விதத்திலும் புதிய மாணவர்களை துன்புறுத்தும் நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளதுடன், புதிய மாணவர்களை துன்புறுத்தும் நடவடிக்கைகளை முன்னின்று நடாத்துதல், ஒருங்கிணைத்தல் என்பவற்றிலிருந்து விலகியிருக்குமாறு சிரேஷ்ட மாணவ/ மாணவிகளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. எந்தவொரு துன்புறுத்தல் நடவடிக்கைக்கும் இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள 1998, 20ம் இலக்க கல்வி சார் நிறுவனங்களில் பகிடி வதை மற்றும் வேறு துன்புறுத்தல் நடவடிக்கைகளை தடுக்கும் சட்டத்தின் கீழ் இச்செயற்பாடுகளில் ஈடுபடுவோர்க்கு தண்டனை வழங்கப்படும்.

12. காப்பாளர்/ உபவிடுதிக்காப்பாளரின் அனுமதியின்றி வேறொரு பல்கலைக்கழக விடுதியில் பதிவு செய்த ஒரு மாணவனை/ மாணவியை மற்றொரு பல்கலைக்கழக விடுதியில் தங்குவதற்கு அனுமதிக்க எந்தவொரு மாணவனுக்கோ/ மாணவிக்கோ முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

13. பல்கலைக்கழகத்தின் மாணவர்களை விடுதியிலிருந்து வெளியேறுமாறு அறிக்கைகள் விடுக்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாணவ/ மாணவிகள் விடுதியிலிருந்து வெளியேற வேண்டும்.

அவ்வாறு வெளியேறுமாறு கூறப்படும் சந்தர்ப்பங்களில் மாணவ மாணவிகள் தமக்களிக்கப்பட்டுள்ள விடுதிக்கு சொந்தமான பொருட்கள் மற்றும் அறைகளுக்கான சாவி என்பவற்றை காப்பாளர் அல்லது காப்பாளரால் அனுமதிக்கப்பட்டுள்ள நபரிடம் உரிய முறையில் ஒப்படைத்தல் வேண்டும்.

14. காப்பாளர்/ உபவிடுதிக்காப்பாளரின் அனுமதியின்றி பல்கலைக்கழக விடுதிக்குள் எந்தவொரு அமைப்பை தோற்றுவிப்பதோ, போதனைகள் நடாத்துவதோ தடை செய்யப்பட்டுள்ளது.

15. விடுதி அறைகளில் இருக்கும் அசையும், அசையா சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பில் மாணவ/ மாணவிகள் தனியாக/ குழுவாக பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளனர். பொருட்கள் தொலைதல், அழிதல் அல்லது உடைதல் ஆகிய சந்தர்ப்பங்களில் ஏற்படும் செலவுகளுக்கும் நட்டங்களுக்குமான தண்டப்பணம் அவற்றுக்கு காரணமான மாணவ/ மாணவிகளிடம் அறவிடப்படும்.

16. தொற்று நோய்களுக்குட்பட்ட நபராயிருப்பின், அத்தொற்று நோயை தடுக்கும் வகையில் அனுமதிக்கப்பட்ட ஒரு வைத்திய அதிகாரியிடம் மருத்துவ சான்றிதழ் ஒன்றை பெற்று விடுதிக்காப்பாளர்/ உபவிடுதிக்காப்பாளரிடம் காட்டுவதுடன் பல்கலைக்கழக மருத்துவ அதிகாரியின் உறுதிப்படுத்தலையும் பெற வேண்டும்.

17. விடுதி வசதிகள் தொடர்பாக குறிப்பிடும் இக்கடிதத்தின் முதல் பக்க இடது மூலையில் உள்ள உங்களது பதிவிலக்கத்தை அலுவலக சேவைகளை பெற்றுக்கொள்ளும் போதும் பணம் செலுத்தும் பற்றுச்சீட்டுகளிலும் குறிப்பிட வேண்டும்.

18. மின்சாரத்தினூடாக விடுதியில் ஏற்படக்கூடிய அபாயங்களை குறைத்துக் கொள்வதற்காக விடுதியினுள் சமைப்பது தடுக்கப்பட்டுள்ளது.

19. கல்விச் செயற்பாடுகள் முடிந்த பிறகு, சிறப்புக் காரணங்களுக்காக, விடுமுறைக் காலத்தில் விடுதியில் தங்கியிருக்க விரும்பும் மாணவர்கள் யாரேனும் இருந்தால், அதற்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணத்தைச் சமர்ப்பித்து ஒப்புதல் பெற வேண்டும்.

20. **விடுதி சம்பந்தமான சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள்**

ஒழுக்கம் மற்றும் விடுதி நிர்வாகம் தொடர்பிலான பல்கலைக்கழக சட்டதிட்டங்கள் ஒழுங்குமுறைகள் அனைத்து மாணவ மாணவியரும் அறிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சட்டதிட்டங்களை அறிந்திராமல் இருப்பது ஒரு காரணமாக கருத்திற்கொள்ள முடியாது. சட்டதிட்டங்கள் ஒழுங்குமுறைகளை மீறும் எந்தவொரு மாணவ/ மாணவியும் பரீட்சிக்கப்படும் போது குற்றம் புரிந்தவராக நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பல்கலைக்கழக விடுதி வசதி பறிமுதல் செய்யப்படும்.

**விடுதியில் தங்குவது தொடர்பான அறிவுரைகள்.**

1.1. **துணிமணிகள் கழுவுதல், காயவைத்தல் தொடர்பானவை**

1) கதவுகளில் அல்லது பால்கனிகளில்(Balcony) உடைகள் காயவைக்க கூடாது. அத்துடன் விடுதிக்கு சொந்தமான மரத்தளபாடங்களின் மேலும் ஈரமான உடைகள் காயவைக்கப்படக் கூடாது.
2) குளியலறையில் உள்ள தொட்டிகளில் உங்களது உடைகளை ஊறவைக்கக் கூடாது.

1.2. **மின்குமிழ் தொடர்பானவை**

1) தங்களது அறையிலிருந்து, அல்லது குளியளறையிலிருந்து வெளியேறும் சந்தர்ப்பங்களில் மின்குமிழ் அணைக்கப்படல் வேண்டும்.
2) தாழ்வாரம்(Coridor) மற்றும் ஓய்வறைகளில் அனைத்து விளக்குகளும் இரவு 10.00 மணிக்கு அணைக்கப்படல் வேண்டும்.

1.3. **குப்பைகள்**

கொடுக்கப்பட்டுள்ள குப்பைத்தொட்டிகள் தவிர்த்து தாழ்வாரங்களில்(Coridor) அல்லது தோட்டங்களிலோ குப்பை போடக்கூடாது. தமது அறைகளை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். தினமும் அறையை சுத்தம் செய்து குப்பைகளை மு.ப 8.00 க்கு முன் துப்பரவு தொழிலாளர்களுக்கு சேகரிக்கக் கூடிய வகையில் கதவின் வெளிப்புரத்தில் வைக்க வேண்டும். அறையை சுத்தப்படுத்துவதற்காக ஒவ்வொரு அறைக்கும் ஒரு தும்புத்தடி, குப்பைத் தொட்டி என்பவை தரப்படும். அறையை சுத்தமாக வைத்திருப்பது அறையில் தங்குபவர்களின் பொறுப்பாகும்.

1.4. **குளியலறை மற்றும் கழிவறை**

குளியலறை மற்றும் கழிவறைகளை பிறருக்கு இடையூறு ஏற்படாத வகையில் பாவிக்க வேண்டும். தண்ணீர்தொட்டி (Tank), Sink, Shower ஆகியவற்றிற்கு சேதமேற்படாத வகையில் பாவிக்க வேண்டும். வீசப்பட வேண்டிய பொருட்களை உரிய முறையில் குப்பைத்தொட்டிகளில் இடவும். தண்ணீர் வாய்க்கால் வழியே இடையூறின்றி போகும் வகையில் செயற்பட வேண்டும்.

1.5. **அமைதி**

இரவு 9.30 தொடக்கம் காலை 6.00 வரையான காலப்பகுதியில் மாணவ∴ மாணவிகளால் அமைதி பேணப்பட வேண்டும்.

21. மாணவனாயின் பெண்களையும் மாணவியாயின் ஆண்களையும் அறைக்கு அழைத்து வருவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

22. மது மற்றும் போதைப் பொருட்கள் பாவித்த நிலையில் பல்கலைக்கழக விடுதிக்குள் பிரவேசித்தல், விடுதிக்குள் போதைப் பொருட்களை கொண்டு வருதல், விடுதிக்குள் மது, போதைப் பொருள் பாவனை முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

23. விடுதி வளாகத்திற்குள்/ உணவகத்திற்குள் ஆயுதங்கள் கொண்டு வருவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

24. மேற்கூறப்பட்ட சட்டதிட்டங்கள், ஒழுக்க விதிமுறைகளுக்கு மேலதிகமாக குறிப்பிட்ட பல்கலைக்கழக விடுதிகளில் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும், காலத்திற்கு காலம் சந்தர்ப்பங்களுக்கேற்ப விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது ஒவ்வொரு மாணவ/ மாணவியினதும் கடமையாகும். அந்நிபந்தனைகள் மற்றும் சட்ட திட்டங்களை மீறுவதால் விடுதி வசதிகளை இழக்க அல்லது வேறு தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**முக்கியமானவை**

1) **பல்கலைக்கழகம் இரண்டாம் கல்வியாண்டுக்காக தங்குமிடம் வழங்காது** என்பதை கவனத்திற் கொள்ளவும். மீண்டும் மூன்றாம் கல்வியாண்டிற்காக , மாணவர் சேவைகள் பிரிவு விடுதி வசதிகளுக்கான விண்ணப்பங்களை திரும்பப் பெறும். அந்த நேரத்தில் பல்கலைக்கழக விடுதியில் வசதி பெற தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணபங்கள் பெறப்படும். விடுதி விண்ணப்பத்தை பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (https://www.rjt.ac.lk/student-service-division/)

2) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு விடுதி வசதிகளை பெற நீர் விரும்புவீராயின் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை பூரணப்படுத்தி கையொப்பமிட்டு உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக விடுதியின் உபவிடுதிக்காப்பாளருக்கு ஒப்படைப்பதுடன் விடுதி வசதியை பெற்றுக் கொள்ளுங்கள்.

3) இங்கு குறிப்பிடப்பட்டும் விடுதி வசதிகள் பெற்றுக் கொண்ட திகதியிலிருந்து ஒரு வார காலப்பகுதியில் விடுதி வசதியை ஏற்றுக் கொள்ளாவிட்டால் உங்களுக்கு வழங்கப்பட்ட விடுதி வசதி ரத்து செய்யப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில் ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் பிரதான வைத்திய அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மருத்துவ சான்றிதழின்றி மீண்டும் விடுதி வசதிகள் பெறுவதற்கான முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

உதவிப் பதிவாளர்
மாணவர் நலன்புரி சேவைகள் கிளை

# <u>பல்கலைக்கழக விடுதிவசதி பெறுகை தொடர்பான பிரகடனம்</u>

1. முழு பெயர் :- ……………………………………………
   :- ……………………………………………...
2. பதிவு எண் :- ……………………………………………...
3. உதவித் தொகை/உதவித்தொகை எண் அல்லது உதவித் தொகையின் பெயர் மற்றும் தவணை மதிப்பு :- ……………………………………………...
4. நிரந்தர முகவரி :- ……………………………………………...
   ……………………………………………...
   ……………………………………………...
5. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர் :- ……………………………………………...
   ……………………………………………
   ……………………………………………

எனக்கு அனுப்பப்பட்ட பல்கலைக்கழக விடுதிவசதி குறித்த கடிதத்தின் உள்ளடக்கங்களை நானே படித்து புரிந்து கொண்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி இருக்க ஒப்புக்கொள்கிறேன் என்று இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

……………………………….

மாணவரின் கையொப்பம்

**அலுவலக பயன்பாட்டிற்கு**

1. விடுதியின் பெயர் :- ……………………………………………
2. அறை எண் :- ……………………………………………
3. விடுதி சேர்க்கை திகதி :- ……………………………………………
4. விடுதி வெளியேறும் திகதி :- ……………………………………………
5. மற்ற விவரங்கள் :- ……………………………………………

………………………………….. ……………

காப்பாளர் /உபவிடுதி காப்பாளர் திகதி